**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.2/2022**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாராயணா | மதம் | : இந்து |
| த/பெ | : சீனிவாசலு நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 55 | கிராமம் | : K.G. கண்டிகை |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**27.03.2026**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

14. நான் எனது வழக்கில் பிரதிவாதி உரக்கடை வைத்து நடத்தி வருவதாக கூறி வருவதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. முகவர்கள் மூலமாக (Agency) எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் வெளி நாடு சென்றதாக நான் கூறியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல் யுகேந்திரா, பிரேம்குமார் ஆகியோர் குவைத்தில் வேலை செய்து திரும்பி வந்து கே.ஜி.கண்டிகையில் குடியேறிவிட்டனர் என்று கூறியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மகன் பிரேம்குமார் தற்போது ஊருக்கு வந்துவிட்டார். யுகேந்திரா குவைத்தில்தான் வேலை செய்து வருகிறார். சூர்யா எங்கு உள்ளார் என்றால் அவர் திரும்ப வந்து திருமணமாகி உள்ளூரில்தான் உள்ளார்.

15. மேற்படி நபர்கள் குவைத்திற்கு சென்றதால் வெளிநாடு செல்ல வேண்டும் என்று கே.ஜி.கண்டிகையில் பலருக்கும் ஆசை வந்ததாக சொல்லியிருப்பதில் அவ்வாறு யாருக்கு வந்தது என்றால் என் பிள்ளைகள் சென்றதை மட்டும்தான் சொன்னேன். யாரும் ஆசைப்பட்டார்கள் என்று சொல்லவில்லை. பிரதிவாதிகளுக்கு பணம் முழுதும் தேவைபட்டதாக சொல்வதில் எவ்வளவு தேவைப்பட்டது என்றால் நான் ரூ.3,90,000தான் கொடுத்தேன். பிரதிவாதிகளிடம் வெளிநாடு செல்ல என்ன செலவாகும் என்பதற்கு எனது 3 சோலைகளை காண்பித்து விவரம் கூறினேனா என்றால் இல்லை. என் மகன் பிரேம்குமார் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்வாரா

தமிழில் கையெழுத்து செய்வாரா என்றால் தெலுங்கில் கையெழுத்து செய்வார். பாலாஜி என்று யாரையாவது தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வங்கி செலுத்து சீட்டுகளின் அடிப்படையில்தான் அவர்கள் பணம் செலவு செய்து அவர்கள் வெளிநாடு சென்றார்கள் என்றால் எனக்கு வங்கி விவரம் எதுவும் தெரியாது.

16. என்னிடம் காட்டப்படும் கிருஷ்ணம்மாள் பணம் செலுத்திய சீட்டு நான் கொடுத்ததா என்றால் இல்லை. என் மனைவி வங்கிக்கே செல்லமாட்டார். என்னிடம் காட்டப்படும் கடவுசீட்டு நகல் என் மகனுடையதா என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் கடவுசீட்டு நகல் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் அடையாள அட்டை (Civil ID) குவைத்தில் என் மகனுக்கு கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு அடையாள அட்டை பற்றிய விவரம் தெரியாது. ஆனால் புகைப்படத்தில் உள்ளது என் மகனது அடையாள அட்டைதான். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் அடையாள அட்டை நகல் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** கிருஷ்ணம்மாளுக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் கனரா வங்கியில் கணக்கு உள்ளது. கனரா வங்கியா ஆந்திரா வங்கியா என்றால் கனரா வங்கி ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆந்திரா வங்கி கணக்கு என் மனைவியுடையதா என்றால் இல்லை.

17. எந்த காலக்கட்டத்திலும் கிருஷ்ணம்மாள் பெயரில் ஆந்திரா வங்கியில் கணக்கு இல்லையா என்றால் இல்லை. ஆந்திரா வங்கியில் என் மனைவி பெயரில் கணக்கு உள்ளது தெரிந்துவிட்டால் உண்மை நிலவரம் தெரிய வரும் என்பதால் நான் உண்மையை மறைத்து சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன், என் மனைவியின் வங்கி கணக்கு புத்தக்கங்கள் என் கைவசம் உள்ளது என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் இடைமனு எண்.6/2025ஐ தாக்கல் செய்து என் கைவசம் உள்ள என் மனைவி, என் மகனின் வங்கி கணக்கு புத்தகங்களை ஒப்படைக்க கோரியிருந்தனர் என்றால் தெரியாது. அம்மனுவிற்கு என் மனைவி, என் மகனின் வங்கி கணக்கு புத்தகங்கள் என் கைவசம் இல்லை என பதில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் எனக்கு தெரியாது.

18. நான் இடைமனு எண்.6/2025ல் என் மனைவி, என் மகனின் வங்கி கணக்கு புத்தகங்கள் என் கைவசம் இல்லை என பதில் தாக்கல் செய்துவிட்டு தற்போது நான் கைவசம் வைத்துள்ளதாக முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் என் வீட்டில் உள்ள ஆவணங்கள் என் கைவசம்தானே இருக்கும். நான் என்ன விகிதாசாரத்தில் பணம் கொடுத்தேன் என்றால் ரூ.500 தாள்களாகதான் கொடுத்தேன். கடனுறுதிச்சீட்டு எழுதிய பரந்தாமனை நான் அழைத்து வந்தேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கும் நான் தற்போது கூறும் சாட்சியமும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு பணமே கொடுக்காமல் உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான்கு கடனுறுதிச்சீட்டுகளில் நான்கு கையெழுத்து பெற்று நான்கு கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார்.

(மறு விசாரணை இல்லை)